

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று (13.10.2024) தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு மற்றும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ள பணிகளை ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து கண்காணிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, 1913 கட்டுப்பாட்டு மையத்தில் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற புகாருக்கு பதிலளித்து, அதற்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்நிகழ்வின்போது மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர் தாரேஷ் அகமது மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் ஆக பொறுப்பேற்ற தென்னிந்திய நடிகர் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (13.10.24) அவரது குறிஞ்சி இல்லம் அலுவலகத்தில் தென்னிந்திய நடிகர் சங்க நிர்வாகிகளான தலைவர் நாசர், பொதுச் செயலாளர் விஷால், பொருளாளர் கார்த்தி, துணை தலைவர்கள் பூச்சி எஸ்.முருகன், கருணாஸ், நடிகர் சங்க அறக்கட்டளை உறுப்பினர்கள் திருமதி.லதா, ராஜேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் நேரில் சந்தித்து நடிகர் சங்கம் சார்பில் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு - ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ. - பி.கே.மூர்த்தி முன்னிலை! எல்.பி.எப்.மோகன் தலைமை!

# சென்னை கிழக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழு சார்பில் - பவளவிழா ஆண்டின் முப்பெரும் விழா!

## அமைச்சர் கே.என்.நேரு - பேராசிரியர் தீபக் நாதன் நல உதவிகள் வழங்குகின்றனர்!

சென்னை, அக் .14-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. - ஆதி திராவிடர் நலக் குழு சார்பில் தமிழர்களின் சுடர்திராவிடத் தொடர், பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு திராவிடத் தொடர்16, வாழும் திறனில் வெளிவானவர், மாற்று சக்தியின் வலுவானவர்கள் என்ற தலைப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (14.10.2024 - திங்கட்கிழமை) மாலை 4 மணிக்கு, மோகன் கார்டன் அக்ரஹாரம், கொரட்டூரில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு சென்னை கிழக்கு மாவட்ட ஆதி திராவிடர் நலக் குழு மாவட்ட அமைப்பாளர் எல்.பி.எப். மோகன் தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., பி.கே. மூர்த்தி, எம்.டி.ஆர்.நாகராஜ், டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.சி , வி.இரமேஷ் என்கிற நீலகண்டன், எம்.சி., டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி., டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி., ஜெ. பாலமுருகன், ஜி.வி.நாகவள்ளி, எம்.சி. து.ஆயிரம், கு. கிருஷ்ணமூர்த்தி, சீ.லோகநாதன், க.மோகன் குமார், த.பிரகாஷ்குமார், ஷெட்டர் க.ஜெயபால், ஆசை ஆரோக்கியம், ஆர். ஜெயபிரகாஷ், தில் மகேஷ், இரா.பாலமுருகன், டி.ஸ்ரீதரன், எஸ்.ஜெயபாலன், உமாமோகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

து.ஜெகநாதன், பி.ஆர். இளங்கோவன், பா.பொற்செழியன், ரா.லட்சுமிரங்கசாமி, வேளச்சேரி இ.ராமு, மு.சண்முகம், ஆ.சுந்தர்ராஜ், மு.விஜயகுமார், த.வ. லால், கே.செல்வம், கோ. முத்து குமாரசாமி, கோ. ராஜ்குமார், ந.குமர வடிவேல், ச.கோதண்டன், கே.இன்பசேகரன், இ.நடராஜன், ஆர்.விமலன், ஜெ.ஐயப்பன், எஸ்.பரமசிவம், வி.துரை, எ.அசோகன், சி. விஜய், பி.எழில்மணி, ஆர்.முனியன், ஏ.குமார், எம்.இ. மூர்த்தி, எம். ராஜேஷ், ஆரோக்கியராஜ், அத்திப்பட்டு, வி.நிர்மல்குமார், இ. பிரகாஷ் இன்பன் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

நலத்திட்ட உதவிகளை கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என். நேரு, டிசம்பர் 3 இயக்கம் மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் பேராசிரியர் தீபக் நாதன் ஆகியோர் வழங்குகின்றனர்.

இதில் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., பி.டி.சி. செல்வராஜ், ப.ரங்கநாதன், கே. எஸ்.இரவிச்சந்திரன், கே. சந்துரு, சி.மகேஷ்குமார், தமிழன் பிரசன்னா, சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி, கே.எஸ்.எம். நாதன், என்.பி.எம். ஷேக் அப்துல்லா, எம்.விஜயகுமார், வே.உமாகாந்த், பரிதி இளம் சுருதி எம்.சி., ஆர். வரதன், கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.எம்.தேவன், புனிதவதி எத்திராசன், இசட் ஆசாத், கூ.பீ.ஜெயின், சரிதாமகேஷ்குமார், ப. ஸ்ரீராமுலு, வே.வாசு, ஐ.சி.எப். வ. முரளிதரன், எ.நாகராசன், செ.வேலு, வி.சுதாகர், எம்.சாமிகண்ணு, செ.தமிழ் வேந்தன், எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி, உஷா நாகராஜ், எம்.இ.சேகர், எஸ். உமா, எம்.கமல், க.பொற்கொடி, கோ.மணி, எஸ். பன்னீர்செல்வம், டி.வி. செம்மொழி, பி.ஜெ.துளசிங்கம், பி.உதயசங்கர், சாவித்திரி வீரராகவன், எம். இப்ராகிம், அ.நிர்மலாதேவி, இரா.கலைச் செல்வி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

கொரட்டூர் டி.முத்து, ஜி. ரங்கநாதன், அம்பத்தூர் எம்.தேவராஜ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு முயற்சியால்

# சென்னம்பட்டி அணைக்கட்டில் இருந்து கண்மாய்களுக்கு தண்ணீர்!

## 746.62 ஏக்கர் பாசன நிலங்கள் பயன் பெறும்! விவசாயிகள் மகிழ்ச்சி!

விருதுநகர், அக். 14 -

திருச்சுழி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காரியாபட்டி மற்றும் மல்லாங்கிணறு பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெறும் வகையில் சென்னம்பட்டி அணைக்கட்டுத் திட்டம் தொடங்கப்பட்டு பணிகள் நிறைவடையாமல் இருந்தன. அப்பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, இத்திட்டம் குறித்து முதலமைச்சர் அவர்களிடம் எனது நிதித்துறை மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கோரிக்கையை எடுத்துரைத்திருந்தேன்.

எனது கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நீர்வளத்துறை மானிய கோரிக்கையில் இத்திட்டத்திற்கான அறிவிப்பு வெளியானது. அதன் கட்டுமானப் பணிகள் அண்மையில் நிறைவடைந்த நிலையில், நேற்று “சென்னம்பட்டி அணைக்கட்டு வலது கால்வாய்” வழியே முதன் முறையாக நந்திக்குண்டு, துலுக்கன்குளம் மற்றும் மல்லாங்கிணறு கண்மாய்களுக்கு நீர் பெருக்கெடுத்தோடியது. அதனால் அப்பகுதி வேளாண் பெருங்குடி மக்கள் பெரு மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இத்திட்டத்தினால் காரியாபட்டி, மல்லாங்கிணறு பகுதிகளில் உள்ள 19 கண்மாய்களின் நீர் ஆதாரம் பெருகும். இதன் மூலம் 746.62 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெற்று விவசாய பெருங்குடி மக்களின் வாழ்வாதாரம் மேலும் முன்னேற வழிவகுக்கும் என நிதி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

வடகிழக்குப் பருவ மழையை

# அனைத்துத் துறையினரும் இணைந்து எதிர்கொள்ள வேண்டும்!

## குமரி மாவட்ட ஆய்வுக் கூட்டத்தில் - அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!

நாகர்கோவில், அக்.14-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் நேற்று (13.10.2024) எதிர்வரும் வடகிழக்கு பருவமழை காலத்தை அனைத்து துறையினரும் ஒன்றிணைந்து எதிர்கொள்ளவது குறித்த கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஏ.சுந்தரவதனம் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிதி, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட பொறுப்பு அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு, துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டு தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுப்பணித் துறை மற்றும் உள்ளாட்சித் துறை கட்டுப்பாட்டில் உள்ள குளங்களில் தேவையான தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்கவும், பெருவெள்ள காலங்களில் பாதிப்பு ஏற்படக்கூடிய கால்வாய் மற்றும் குளக்கரைகளை சீரமைக்கும் பணிகளை விரைந்து முடிக்கவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் பருவமழை காலங்களில் சீரமைப்பு பணிகளுக்கு தேவையான மணல் மூட்டைகள், மரம் அறுக்கும் இயந்திரங்கள், ஜேசிபி, மின்மோட்டார் போன்றவற்றை போதுமான அளவில் தயார்நிலையில் வைக்கவும், தற்காலிக தங்கும் முகாம்களை உடனடியாக பார்வையிட்டு அவற்றில் போதிய அடிப்படை வசதிகள் உள்ளனவா என்பதை உறுதி செய்யவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டது. பழுதான நிலையில் உள்ள அபாயகரமான கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த சம்மந்தப்பட்ட அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது. 15 தினங்களுக்கு ஒருமுறை ஊராட்சி, பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகள் ஆகியவற்றில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை குளோரினேசன் செய்ய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடலோரப்பகுதிகள் மற்றும் வெள்ள அபாய பகுதிகளில் பாதிக்கப்படும் நபர்களை மீட்க தேவையான மீட்பு உபகரணங்களை தயார்நிலையில் வைக்க மீன்வளத்துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புத் துறைக்கு தெரிவிக்கப்பட்டது. தாழ்வான பகுதிகளில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை கண்டறிந்து உடன் நடவடிக்கை எடுக்கவும் மேலும் டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளவும் பொது சுகாதாரத்துறையினருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

மேலும் பொதுமக்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்தான நெடுஞ்சாலைகள், பள்ளிகள் மற்றும் பிற பகுதிகளில் நிற்கும் மரங்களை சம்மந்தப்பட்ட துறைகள் மூலம் அகற்றப்பட்டதை உறுதி செய்ய அனைத்து வட்டாட்சியர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. மரங்கள் மற்றும் மரக்கிளைகள் மின்கம்பிகள் மீது தொட்ட நிலையில் காணப்பட்டால் மின்சாரவாரியம் மூலம் மரம் மற்றும் மரக்கிளைகளை வெட்டி அகற்றவும், மின்பழுது தொடர்பான புகார்களை தெரிவிக்க 24 மணி நேரமும் இயங்கும் தொலைப்பேசி எண் 9498794987 என்ற எண் செயல்பட்டு வருவதை பொதுமக்களுக்கு தெரிவிக்க வேண்டும். மேலும் மின்வாரிய பணியாளர்கள் 24 மணி நேரமும் பணியிலிருப்பதோடு, வரும் புகார்களுக்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள மின்சாரவாரிய அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் வீடு மற்றும் அலுவலகங்களின் மேல் பகுதியில் குப்பைகள் மற்றும் மரத்தின் இலைகள் காணப்பட்டால் அவற்றை அப்புறப்படுத்தி தண்ணீர் தேங்காதவாறு நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து துறை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. மேலும் பொதுமக்களுக்கு மழைக்காலங்களில் தண்ணீரை நன்றாக கொதிக்க வைத்து பருகவேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பிளாஸ்டிக் பாட்டில், டயர்கள், தேங்காய் சிரட்டைகள் இவற்றில் தண்ணீர் தேங்கி கொசுக்கள் உற்பத்தி ஏற்பட்டு டெங்கு போன்ற காய்ச்சல்கள் பரவ வாய்ப்புள்ளதால் அவற்றை அப்புறப்படுத்தி எப்போதும் சுத்தமாக வைத்துக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு தேவையான பால், பால் பவுடர், உணவு பொருட்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் உள்ளிட்டவைகளை தயார் நிலையில் வைத்திருக்க துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

காய்ச்சல், சளி இது போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் சென்று பரிசோதனை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கு நோய்தொற்று ஏற்பட்டால் கால்நடை மருத்துவரை அணுகவும் மற்றும் கால்நடைகள் இறந்தால் அவற்றை உடனடியாக அப்புறப்படுத்தவும், அவற்றிற்கு உடற்கூறு ஆய்வு செய்து இழப்பீட்டு தொகையினை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென துறை அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மழை வெள்ள பாதிப்பு சேதங்கள் தொடர்பான 24 மணி நேரமும் இயங்கும் மாவட்ட கட்டுப்பாட்டு அறை கட்டணமில்லா தொலைப்பேசி எண் 1077 என்ற எண்ணிற்கு தொடர்புகொண்டு பொதுமக்கள் புகார்களை தெரிவிக்கலாம் என்ற விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மற்றும் தேசிய நெடுஞ்சாலைத்துறையினர் பழுதடைந்த சாலைகளை போர்கால அடிப்படையில் சீரமைத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பருவமழை மற்றும் பேரிடர் காலங்களில் பொதுமக்கள் ஆறு மற்றும் கடலோரப் பகுதிகளுக்கு செல்லாமல் பாதுகாப்பாக இருக்கவும், சிறுவர்கள் மற்றும் குழந்தைகளை மேற்படி பகுதிகளுக்கு அழைத்துச்செல்லாமல் தற்காத்துக்கொள்ளவும், தன்னார்வலர்கள் தங்கள் பகுதிகளில் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து பொதுமக்களுக்கு தேவையான உதவிகளை செய்யவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியதை போன்று பருவமழை காலங்களில் ஒரு உயிரிழப்பு கூட ஏற்படாத வகையில் நமது செயல் திட்டம் இருக்க வேண்டும். பொதுமக்களுக்கு எவ்வித சிரமமும் இல்லாத வகையிலும், அவ்வாறு ஏதேனும் சிரமம் ஏற்பட்டால் அதனை உடனடியாக களையயும் வகையில் நாம் மிகுந்த வேகத்தோடு செயல்பட வேண்டும் என அனைத்து அலுவலர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆய்வுக்கூட்டத்தில் ஒவ்வொரு துறையினரும் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என அறிவுறுத்துப்பட்டுள்ளது. அவற்றை அனைத்து அலுவலர்களும் உள்வாங்கி கொண்டு பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாதவாறு சிறப்பாக செயல்பட வேண்டும். வடகிழக்கு பருவமழை காலத்தை அனைத்து துறையினரும் ஒன்றிணைந்து எதிர்கொள்ள வேண்டும் என அனைத்து துறை அலுவலர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு நிதி, சுற்றுச் சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட பொறுப்பு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

நடைபெற்ற கூட்டத்தில் கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் வ.விஜய் வசந்த், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜி.பிரின்ஸ் (குளச்சல்), செ.ராஜேஷ் குமார் (கிள்ளியூர்), முனைவர் தாரகை கத்பர்ட் (விளவங்கோடு), மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பாலசுப்பிரமணியம், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) பாபு, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, பத்மநாபபுரம் உதவி ஆட்சியர் வினய்குமார் மீனா, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.எஸ்.காளீஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சுகிதா, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் சின்னகுப்பன், வட்டாட்சியர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



கழகத் தலைவர் – முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் ஆகியோரின் பேராதரவுடன் மீண்டும் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றி பெறச் செய்த கொளத்தூர் மேற்கு பகுதி வாக்காள பெருமக்களுக்கு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நேற்று காலை 8 மணி முதல் 12 மணிவரை மேற்கு பகுதிக்கு உட்பட்ட வார்டு 64, 64(அ), 65, 65(அ), 69, 69(அ), ஆகிய வட்டங்களில் உள்ள வாக்காள பொதுமக்களுக்கு வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி வீதி வீதியாக சென்று நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்தார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. கிரிராஜன் கொளத்தூர் மேற்கு பகுதி செயலாளர் எ.நாகராசன், மாமன்ற உறுப்பினர்கள் சாரதா, சரிதா மகேஷ் குமார் , வட்டக் கழகச் செயலாளர்கள் செ.முருகன், எம்.டி. தமிழ்ச்செல்வன்,என். செளந்தர், என். போல்ராஜ்,எம். ஜெயச்சந்திரபாபு, பி.அதிபதி மற்றும் கூட்டணி கட்சிகள் நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (13.10.2024) சேலம் மாவட்டம், ஓமலூர் அரசு மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) லலித் ஆதித்ய நீலம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.